1972 ஆகஸ்ட் 10]

தேவைப்படும் மூலப் பொருள்களின் தேவை முழுவதையும் மாநில அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இதில் சங்கடம் இருந்தால் மத்திய அரசோடு சேர்ந்து செயல்படலாம். வினியோகிப்பதையும் மாநில அரசுதான் செய்ய வேண்டும். அப்போதுதான் எங்கேயாவது தவறு நேர்ந்தால்கூட பொறுப்பை நிர்ணயிக்க முடியும். இப்போது முழுவதையும் கொடுக்காமலுள்ள நிலையில் பற்றுக்குறையை வேறு எங்கிருந்து பெறுகின்றார்கள் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். உண்மையிலேயே இதுதான் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. 'அதிக விலைக்குக் கிடைக்கிறது, வாங்குகிறோம்' என்று தொழிலதிபர்கள் சொல்லுகின்றார்கள். இந்த நிலைக்குக் காரணம் யார் என்று குறிப்பிட்டால் அம்மையார் அவர்களுக்குக் கோபம் வரக்கூடும். எனவே இந்த முறைக்குப் பதிலாக மத்திய அரசு தைரியமாக முன்வந்து மாநில அரசுக்குப் பொறுப்பை விட்டுக்கொடுத்தால் இதிலுள்ள குறைபாடுகள் நீங்குவதற்கு வழி பிறக்கும். இதுதான் இந்த அரசின் கொள்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீடிக்கப்படுகிறது.

தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

* 45 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னக பெட்ரோ கெமிக்கல் தொழில் கார்ப்பரேஷன் தூத்துக்குடியில் ரசாயன சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவிட அரசுக்கு ஏதேனும் ஆலோசனை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் நிறுவனம் தூத்துக்குடியில் தொழிற்பயன் எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஏற்புடைமை அறிக்கையை அனுப்பியது. இத்தொழிற்சாலைக்காக உரிமம் வேண்டித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

மஞ்சளாறு அணைக்கட்டுப் பாசன ஏரிகள்

*46 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள மஞ்சளாறு அணைக்கட்டில் பாசன உரிமை பெற்ற கண்மாய்கள் எவை?